# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE
REACHING NATIONS

Tamil
₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

Vol. XXVIII | JUNE 2023 | No. 06


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### சங்கீதம் 47:1-9

1.. சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.

2. உன்னதமானவராகிய கர்த்தர் பயங்கரமானவரும், பூமியின்மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார்.

3. ஜனங்களை நமக்கு வசப்படுத்தி, ஜாதிகளை நம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துவார்.

4. தமக்குப் பிரியமான யாக்கோபின் சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார். (சேலா)

5. தேவன் ஆர்ப்பரிப்போடும், கர்த்தர் எக்காள சத்தத்தோடும் உயர எழுந்தருளினார்.

6. தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்; நம்முடைய ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்.

7. தேவன் பூமியனைத்திற்கும் ராஜா; கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள்.

8. தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார்; தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்.

9. ஜனங்களின் பிரபுக்கள் ஆபிரகாமின் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்; பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள்; அவர் மகா உன்னதமானவர்.

# புதிய பருவ காலத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்! கவனச் சிதறலுக்கு இடங்கொடாதீர்கள்!!

சகோ. ஏஞ்சலின் செல்வ குமாரி



இஸ்ரவேலரின் வாழ்க்கையில் துவங்கிய ஒரு புது யுகத்தை, ஒரு புது பருவகாலத்தை விளக்கிக் காட்டுகிறது வேதாகமத்திலுள்ள யோசுவாவின் புத்தகம். இஸ்ரவேலின் சரித்திரத்தில் மிகப் பெரிய தலைவர்களில் ஒருவரான மோசே மரித்த பின்பு, அவரது இடத்திலிருந்து மக்களை வழிநடத்த யோசுவா தெரிந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட்டார். யோசுவாவிற்கு மிகப்பெரிய பொறுப்பு காத்திருந்தது. இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்வது யோசுவாவுக்கு எளிதாயிருக்கவில்லை. மோசேயினால் பயிற்றுவிக்கப்பட்டு, வழிநடத்தப்பட்ட நிலையில் யோசுவா இருந்தாலும், யோசுவாவின் சிந்தையில் என்ன தோன்றியிருக்கும் என்பதை ஒருவராலும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. இஸ்ரவேல் மக்களின் நடத்தையையும், மோசேயை அவர்கள் எப்படி நடத்தினார்கள் என்பதையும் நேரில் கண்டிருந்தான். மோசேயின் முடிவையும் அவன் அறிந்திருந்தான். இதனால் யோசுவா கலங்கி, பயந்திருக்கக்கூடும். ஆனால் மோசேயோ, தன்னுடைய கைகளை யோசுவாவின் மேல் வைத்து, அவனைத் தனக்குப் பின் தன் ஆளுகையின் கோலை ஏற்றுக் கொண்டு, மக்களை தலைமை ஏற்று வழிநடத்த அபிஷேகித்து நியமித்திருந்தான்.

**மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்; இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.** உபாகமம் 34:9.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

*போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்* அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...






"... நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்."

- நெகேமியா 4:9.

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**

Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**

Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**

Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**CORE LEADERS**

Bro. K. Puratchivendan
Dr. Rabinder Boaz, M.S.
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah

**E.mail ID**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**

Echo of His Call


கர்த்தருக்குள் பிரியமான நண்பர்களே!

உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக! நலமுடன் வாழ்ந்து பெருக்கமடைவீர்களாக. நாங்கள் உங்களுக்கு ஜெபத்துணையாளர்களாக இருக்கிறோம். தயவு செய்து இப்பகுதியை முழுமையாக படியுங்கள்.

நம்மை ஆண்டவர் ஆசீர்வதித்திருக்கிறார். தேவையான சுகம், பெலன், பாதுகாப்பு, அரவணைப்பு யாவையும் நமக்கு நல்கி நம்மைக் கண்காணித்து வருகிறார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து நல்லவர். அவர் உங்களோடு இருப்பாராக.

**நீங்கள் தயவுடன் நினைவுகூர வேண்டிய முக்கிய விஷயங்கள்!**

1. தினமும் இரவு 10.00 மணி நம் ஜெப நிமிஷம்! நீங்கள் எந்த ஊரிலிருந்தாலும், தேசத்திலிருந்தாலும், உங்கள் தேச நேரப்படி உலகளாவிய நமது வருங்கால சந்ததியாரான உலகமனைத்திலுமுள்ளக் குழந்தைகளுக்காகவும், வாலிபப் பெண், ஆண் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டுகிறோம். இந்தத் திட்டத்தை **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனம்** (Global Vision for Youth and Kid Care) என்று அழைக்கிறோம். இந்த ஊழியத்தின் மூலம் ஏராளம் இளம் வாலிப ஆண்களும், பெண்களும் பயன்பெற தேவன் உதவி வருகிறார். இவற்றை நம் **Echo of His Call** என்ற யூடியூப் சேனலைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தலாம். இது பற்றிய சாட்சி / ஜெபக்குறிப்புகள் / குறுஞ்செய்திகள் ஆகியவற்றை எங்களிடமிருந்து நீங்கள் பெற இந்த **Echo of His Call** என்ற யூடியூப் சேனலை உங்கள் செல்போனில் முறைப்படி Subscribe பண்ணிக் கொள்ளுங்கள். +91–98412 71858, +91–98410 71858 என்ற நமது செல்போன் மற்றும் வாட்ஸ்அப் எண்களை உங்கள் செல்போன்களில் நிரந்தரமாக பதிவு (save) செய்து கொள்ளுங்கள். சிரமத்திற்கு வருந்துகிறோம்.

2. தினந்தோறும் அதிகாலை 5.00 மணி முதல் நம்முடைய 5 நிமிட தேவ செய்தியும், ஜெபமும் **Echo of His Call** என்ற யூடியூப் சேனலில் வெளிவருகிறது. இச் செய்திகளை போதகர் S. சாம் செல்வ ராஜ் மற்றும் போதகர் அலெக்ஸ் சாம்சன் சாம் ஆகியோர் வழங்குகிறார்கள். எங்களை +91–98412 71858, +91–98410 71858 என்ற வாட்ஸ் அப் எண்கள் மூலம் தொடர்பு கொள்ளலாம். இதனை நீங்கள் பார்ப்பதின் மூலம் உங்களுக்கு நம் போதகர்களுடன் நேரடியாக ஜெபிக்கும் வாய்ப்பும் கிடைக்கிறது. உலகளாவிய விதத்தில் ஏராளம் பேர் தினமும் பார்த்து, பங்கு பெற்று பயன் அடைகிறார்கள். நீங்களும் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் செய்ய வேண்டியது: மேற்குறிப்பிட்ட எங்கள் செல்போன் எண்களை உங்கள் செல்போனில் நிரந்தரமாக பதிவு (save) செய்து வைத்துக் கொள்ளுங்கள். இது மிக முக்கியம்.

3. நம் கிராம உயர்நிலைப் பள்ளியான **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** ஓர் புதிய உத்வேகத்துடன் வேகமாக செயல்படுகிறது. திறமையும், ஆவிக்குரிய முதிர்ச்சியும் மிக்கக் கல்வியாளர்களைக் கொண்டு சிறப்புடன் நடைபெறுகிறது. நல்ல மாணவர்களும், ஆசிரியர்களும் தேவை. இதன் வளர்ச்சியை நினைவு கூர்ந்து ஜெபியுங்கள்.



செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின் ஆசிரியைகள்



நெகேமியா வேதாகமக் கல்லூரி நிர்வாகக் குழு

4. நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** (முழுநேரம்) இந்தி மற்றும் (மாலைநேரம்) தமிழ் மொழிகளில் கல்வியை வழங்குகின்றன. இக்கல்லூரிகள் சென்னையிலுள்ள மிகவும் சிறந்த வேத விரிவுரையாளர்களைக் கொண்டு நடைபெறுகின்றன. தரமான தரிசனம் பெற்ற மாணவர்கள் நமக்குத் தேவை. ஜூன் மாதம் 5–ம்தேதி 2023–2024ம் ஆண்டிற்கான வகுப்புகள் ஆரம்பமாகும். தற்பொழுது 30 மாணவர்கள் பட்டம் பெற்று களப்பணிக்கு செல்ல ஆயத்தமாக இருக்கின்றனர்.

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**யின் 24–வது பட்டமளிப்பு விழா ஜூன் 3–ம் தேதி நடைபெறும்.

5. கடந்த மே மாதம் பல இடங்களில் சிறுபிள்ளைகளுக்கான வேனிற்கால வேதாகம விடுமுறைப் பள்ளிகள் நடந்தன. ஆயிரத்திற்கதிகமான பிள்ளைகள் ஆண்டவரால் தொடப்பட்டார்கள்.

6. நமது **அழைப்பின் எதிரொலியின்** 16 மொழிப் பத்திரிகைகள், தேவாலயங்கள், கடிதமுறை இறையியல் கல்வி, சுவிசேஷ அச்சகம், சிறுவர் ஊழியங்கள், வாலிபர் ஊழியங்கள், மருத்துவமனை ஊழியங்கள் யாவற்றின் மேலும் தேவ கரம் தங்கியிருக்கிறது. இதற்காக நாம் கர்த்தருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

சுவிசேஷத்தால் சந்திக்கப்பட வேண்டிய ஓர் பெரிய உலகத்தை ஆண்டவர் நம் கைகளில் கொடுத்திருக்கிறார். இந்த தரிசனத்துடன் செயல்பட ஏராளம் ஏராளம் ஊழியர்களும், தங்கள் பொருளாதாரத்தால் தாங்கும் தேவப்பிள்ளைகளும் தேவை.

எங்களுக்காக ஜெபியுங்கள். ஆவிக்குரிய போராட்டங்களும், கஷ்டங்களும் உண்டு. தேவன் ஜெயம் தந்து வருகிறார். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

நேசர் இயேசு கிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு நடந்தபின்னும் யோசுவாவுக்கு தைரியம் வரவில்லை என்றே நான் கருதுகிறேன். எனவேதான், தேவன் மீண்டும் மீண்டுமாக, ... **நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன் ... பலங்கொண்டு திடமனதாயிரு ...** என்று யோசுவாவை தைரியப்படுத்துகிறார். யோசுவா 1:5,6.

நம்முடைய வாழ்க்கையில் ஊழியப் பாதையில், ஒரு சிலரை புதிய பருவத்திற்குள்ளாய்க் கொண்டு செல்ல தேவன் அழைக்கிறார். பழைய வாழ்க்கை, ஊழியம் நன்றாகத்தான் இருந்தது. இருப்பினும் ஒரு புதிய பருவத்தை நாம் அணைத்து ஏற்றுக்கொள்ள அவசியமாயிருக்கிறது. நம்மில் சிலர் இவ்வாறாகக் கூறலாம்: “என்னுடைய வாழ்க்கையின் முடிவு கட்டத்திற்குள் வந்து விட்டேன். இனி என் வாழ்க்கையில் ஒரு புதிய பருவம் எங்கே வரப் போகிறது?” **தாவீதுக்கு ஆதரவாக இருந்த பர்சிலா, 80 வயது கிழவனாயிருந்தான்.** (2 சாமுவேல் 19:32). ஆகவே, நீங்களும் விரும்பினால், வாழ்க்கையின் புதிய பருவத்திற்குள்ளாய் தேவன் உங்களைக் கொண்டு செல்ல முடியும்.

புதிய பருவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமானால், சில காரியங்களை நம் பழைய வாழ்க்கையிலிருந்து விட்டு விட வேண்டும். பழையதைப் பற்றிக்கொண்டே இருப்போமானால், புதிய பருவத்தில், தேவன் நமக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை முழுமையாக அனுபவிக்க முடியாது.

## 1. புதிய பருவகாலம்!

யோசுவா 1:2 – **என் தாசனாகிய மோசே மரித்துப் போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்.**

இந்த வசனத்திலுள்ள சில வார்த்தைகளை முக்கியப்படுத்திக்

## அவசர அறிவிப்பு

*சூழ்நிலைகள் சாதகமாக இல்லாதபடியால் ஏராளமான கிறிஸ்தவப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படாமல் நிறுத்தப்பட்டு விட்டன. நம்* **அழைப்பின் எதிரொலி** *பத்திரிகைகளுக்கும் இந்நிலை ஏற்படலாம். மேலும் கடின உழைப்பு மற்றும் மிகுந்த சிரமத்துடன் பத்திரிகைகளை மாதந்தோறும் தபால் மூலமாக அனுப்பி வருகிறோம். ஆனால் தபால்துறை ஊழியர்கள் கருத்தாக நமது பத்திரிகைகளை விநியோகம் செய்வதில்லை என்பதைப் புரிந்து கொண்டுள்ளோம். நம் பத்திரிகைகளை பெற்றுக் கொள்பவர்களில் சிலர் அதை திறந்துகூட பார்ப்பதில்லை.*

*எனவே,* **அழைப்பின் எதிரொலி பத்திரிகைகளை தொடர்ந்து பெற மிகவும் விரும்புபவர்களும், கட்டாயம் படிப்பவர்களும் உங்களுடைய சரியான முகவரி, செல் நம்பர், இ.மெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு தொலைபேசி மூலமோ அல்லது வாட்ஸ்அப் மூலமோ அல்லது குறுஞ்செய்தி மூலமோ அல்லது இ.மெயில் மூலமோ அல்லது தபால் மூலமோ தயவு செய்து உடனே அனுப்பி உதவுங்கள்.** *ஏதாவது வேறு வழிகளில் பத்திரிகைகள் உங்களுக்கு வந்து சேர ஆவண செய்வோம். எங்களுக்கு உங்களின் முகவரிகள் கிடைக்காதபட்சத்தில் தொடர்ந்து பத்திரிகைகள் அனுப்ப இயலாத சூழ்நிலைக்கு தள்ளப்படுவோம். எந்தச் சூழ்நிலையிலும், நாங்கள் உங்கள் தொடர்பையும், நட்பையும் இழக்க விரும்பவில்லை. தயவு செய்து உதவுங்கள்.*

எங்கள் முகவரி:

**அழைப்பின் எதிரொலி,**

10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.

கைபேசி எண்கள் : +91-98410 71858, +91-98412 71858

தொலைபேசி எண்கள் : (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

E-mail : sam@echoofhiscall.org / echosamselveraj@gmail.com.

YouTube Channel: Echo of His Call.

காண்பித்துவிட்டு செய்தியின் ஆழத்திற்குள் போக விரும்புகிறேன்.

'என் தாசனாகிய மோசே மரித்து போனான்.' பழைமை கடந்து போய்விட்டது. "இப்பொழுது" என்ற வார்த்தை ஒரு புதிய பருவத்தைக் குறிக்கிறது. உங்கள் வாழ்க்கையின் அடுத்த பருவத்தில் தேவன் உங்களுக்கு வைத்திருப்பதை அணைத்து ஏற்றுக் கொள்ள நேரம் வந்துவிட்டது.

உங்கள் ஊழியத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் காலம் இதுவே.

கர்த்தருடைய தயவை உங்கள் குடும்பத்திலும், உங்கள் பிள்ளைகளிலும், உங்கள் வீட்டுக் காரியங்களிலும் உணரும் புதிய பருவகாலம் இதுவே.

இதுவே சரியான நேரம் ... பின்பு அல்ல ... ஆனால் கேள்வி என்னவென்றால், நாம் ஆயத்தமாய், ஆவலாய் இருக்கிறோமா ? இந்த காலத்தை ஏற்றுக் கொள்ள தயாரா ?

## 2. ஆயத்தமாகுங்கள்!

என் கவனத்தை ஈர்த்த அடுத்த வார்த்தை, 'எழுந்து' யோசுவாவை எழுந்து ஆயத்தமாக தேவன் கூறுகிறார். அநேக நேரங்களில், முதல் அடியை எடுத்து வைக்க நாம் தயங்குகிறோம். நம் கண்களால் ஏதாவது ஆசீர்வாதத்தைக் காணாவிட்டால், அடுத்த அடியை எடுத்து வைக்க நாம் விரும்புவதில்லை. இதை வாசிக்கும் உங்களில் எத்தனை பேர், உங்கள் வாழ்க்கையின் அடுத்த நிலைக்குச் செல்ல தேவனுக்காக காத்துக் கொண்டிருக்கிறீர்களோ எனக்குத் தெரியாது. அடுத்த அடிக்காக, தேவனது பதிலுக்காக ஒருவேளை உங்களில் சிலர் காத்துக் கொண்டிருக்கலாம்.

அன்பு நண்பர்களே, புதிய பருவ காலம் இதுதான். அதை ஏற்றுக் கொள்ள நீங்கள் எழுந்து ஆயத்தமாவீர்களா ? அடுத்த அடியை எடுத்து வைக்க விசுவாசம் நம்மை பலப்படுத்த வேண்டும். எது உங்களை முன்னேற விடாமல் தடை செய்கிறது ? கர்த்தருடைய வாக்குத்தத்தம் மாத்திரம் உங்களுக்குத் தேவை. கர்த்தருடைய வார்த்தை கிடைக்காமல் அடுத்த அடியை எடுத்து வைக்க வேண்டாம். ஆனால், கர்த்தருடைய வாக்குத்தத்த வசனம் உங்களுக்கு கிடைத்து விட்டால், முன்செல்ல தயங்க வேண்டாம். முன்னேறுங்கள். நமது வாழ்க்கை குறுகினது. கர்த்தருக்காக நாம் எதைச் செய்கிறோமோ அதுவே நிலைத்து நிற்கும். முன்னேறிச் செல்ல ஆயத்த மாகுங்கள். நீங்கள் தீர்மானித்து முதல் அடியை எடுத்து வைத்தால், உங்களுக்காக மற்றவை எல்லாம் முன்னேறத் தொடங்கும்.

**சம்பவிப்பது என்னவென்றால், சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில், மேலேயிருந்து ஓடிவருகிற யோர்தானின் தண்ணீர் ஓடாமல் ஒரு குவியலாக நிற்கும் என்றான்.** யோசுவா 3:1:3.

முன்னேற முதல் அடியை வைக்க நீங்கள் தீர்மானித்த உடனேயே, தடையாகிய அந்த 'ஆறு', உங்கள் முன்னிருந்து விலகி வழி விடும். நீங்கள் ஆயத்தமா ?

## 3. கடந்து செல்வது!

தேவன் யோசுவாவிடம் சொன்னார்: 'கடந்து ...போங்கள்.'

'கடப்பது' என்பது ஒரு 'செயல் முறை'. ஏதோ ஒரு நாள் நடக்கும் நிகழ்ச்சி அல்ல. நீங்கள் அறியாத, சற்றும் புரியாத சூழ்நிலைகளின் வழியாக ஒருவேளை நீங்கள் கடந்து செல்ல வேண்டியிருக்கலாம். யோர்தானைக் கடந்து செல்ல தேவன் இஸ்ரவேலரிடம் கூறினார். எப்படி அவர்கள் யோர்தானைக் கடக்க முடியும் ? மனித சிந்தையால் அதைப் புரிந்து கொள்ள முடியாது. என் அருமை நண்பர்களே, கர்த்தர் உங்களுக்கு ஒரு வாக்குத் தத்தத்தை தருவாரானால், உங்கள் மாமிச கண்களால் அல்ல, ஆவிக்குரிய கண்களால் அதைக் காண வேண்டும். மாமிச கண்களால் அதைப் பார்ப்போமானால், தொலைவில் உள்ளதைப் பார்க்க முடியாது. அருகிலுள்ள தண்ணீரையும், கரையில் உயர்ந்து மோதும் அலைகளை மட்டுமே பார்க்க முடியும். தண்ணீர் பெருக்கெடுத்து வருவதைப் பார்த்து பயந்து விடுவோம். ஆற்றைக் கடக்க உங்களால் முடியாமற் போகும். ஆனால், நாம் ஆவிக்குரிய கண்களால் பார்ப்போமானால், நமது கற்பனைக்கு அப்பால் கர்த்தர் செய்யக்கூடியதைக் காணலாம். எபேசியர் 3:20. வேதாகமத்தில் எனக்கு மிகவும் பிடித்த வசனம். மனித குலத்திற்குக் கொடுக்கப்பட்ட 'கற்பனைத் திறன்' ஒரு மிகப் பெரிய வரம் என்று சொல்வார்கள். எதையும், எந்த நேரத்திலும், கற்பனை செய்து ஒருவரால் காண முடியும். கற்பனைக்கு ஒரு எல்லை இல்லை. கர்த்தர் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்க விரும்பும்போது, அவரது சித்தத்தை தமது பிள்ளைகளின் வாழ்க்கையில் நிறைவேற்ற விரும்பும்போது, நமது நினைவுகளுக்கெல்லாம் அப்பால், முடிவில்லாத எல்லையில்லாத ஆசீர்வாதங் களைத் தர அவர் வல்லவராயிருக்கிறார்.

**நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின் படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு,** எபேசியர் 3:20.

நம் நினைவுகளுக்கும் விருப்பங்க ளுக்கும் மேல் செய்ய அவர் வல்லவர். ஆமென்! இதுவே இயேசு கிறிஸ்துவின் வல்லமை. இதுவரை, அவருடைய வல்லமையை நீங்கள் அனுபவிக்கவில்லை என்றால் இனிமேலாவது அனுபவிக்க முயற்சி செய்யுங்கள். அவரை விசுவாசித்து அவரைக் கேட்பீர்களானால், நீங்கள் கேட்பதற்கும்,

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


**நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.**

*வேளச்சேரி – முழுநேரம் – இந்தி*
*சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்*
(திங்கள், செவ்வாய், வியாழன்)

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2023 ஜூன் 19 முதல் ஜூலை18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூன் 19 ⇨ ஜூன் 3, 2023 அன்று சிறப்பாக நிறைவடைந்த **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் பட்டமளிப்பு விழாவை ஆசீர்வதித்தமைக்காக...

ஜூன் 20 ⇨ மே 10, 2023 அன்று நடைபெற்ற நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் முன்னாள் மாணவர்களின் கூடுகையை ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஜூன் 21 ⇨ போதகர் பால் எபினேசர் அவர்கள் நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் மேன்மைமிகு கல்வி ஆலோசகராக பதவியேற்றமைக்காக...

ஜூன் 22 ⇨ உலகளாவிய அளவில் வாலிபர் மற்றும் குழந்தைகளுக்காக தினமும் இரவு 10 மணிக்கு ஜெபிக்கும் **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனத்தை** தொடங்க வைத்த கிருபைக்காக...

ஜூன் 23 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி**யின் 16 மொழிப் பத்திரிகைகளும் ஒவ்வொரு மாதமும் சரியான நேரத்தில் பிரசுரமாக ஒத்துழைத்து வரும் இணை ஆசிரியர்களுக்காக ...

ஜூன் 24 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரி**களின் புதிய மாணவர் சேர்க்கைக்கான முயற்சிகளை ஆசீர்வதித்தமைக்காக...

ஜூன் 25 ⇨ 1969–ம் ஆண்டு முதல், நமது பத்திரிகை ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 26 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் புதிய மாணவர் சேர்க்கைக்கு அலுவலக மற்றும் பள்ளி ஆசிரியர்களின் முயற்சிகளை ஆசீர்வதித்ததற்காக...

ஜூன் 27 ⇨ நமது பங்காளர்களின் ஜெப மற்றும் பொருளாதார உதவிகளுக்காக...

ஜூன் 28 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரி**கள் மற்றும் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் 2022–23–ம் கல்வி ஆண்டு வெற்றிகரமாக நிறைவடைந்ததற்காக...

ஜூன் 29 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி**யின் தலைமைச் சபை மற்றும் கிளைச் சபைகளின் தலைவர்கள் மற்றும் விசுவாசிகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 30 ⇨ தலைமைச் சபை மற்றும் கிளைச் சபைகளின் விடுமுறை வேதாகமப் பள்ளிகளை ஆசீர்வதித்தமைக்காக...

ஜூலை 01 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதான கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை 02 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூடியூப்பின் தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் ஆங்கில செய்திகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூலை03 ⇨ நமது ஊழியத்தின் அனைத்து முயற்சிகளையும் இதுவரை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜூலை 04 ⇨ ஆப்பிரிக்காவிலுள்ள சூடான் நாட்டில் நிலவும் அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர...

ஜூலை 05 ⇨ நமது தலைமைப் போதகர் எழுதிவரும் சுயசரிதைக்கான வழிநடத்துதலுக்கான கிருபையை வேண்டி ...

ஜூலை 06 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பம் மற்றும் குழுக்களை கர்த்தர் அனைத்துத் தீய வல்லமைகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க வேண்டி ...

ஜூலை 07 ⇨ உலகம் முழுவதும் பாகுபாடின்றி அனைத்து சபைகளிலும் எழுப்புதலை காண வேண்டி ...

ஜூலை 08 ⇨ கர்த்தர் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் பணியாளர்களை சேர்த்திட வேண்டி...

ஜூலை 09 ⇨ கோவிட்–ன் புதுவகையான மற்றும் இதர தொற்று நோய்களை முழுமையாக அழித்திட வேண்டி...

ஜூலை 10 ⇨ உலகளாவிய அளவில் வாலிபர் மற்றும் குழந்தைகளுக்காக ஜெபிக்க **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனத்தில்** அதிகமான தேவமக்கள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டி...

ஜூலை 11 ⇨ தங்கள் குடும்பத்திலுள்ள இளம் பிராயத்தினர் மற்றும் குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோருக்கு தேவ வழிகாட்டுதல் கிடைக்க வேண்டி ..

ஜூலை 12 ⇨ தூரதேசங்களில் உள்ள சந்திக்கப்படாத மக்கள் நடுவே, சுவிசேஷ பணியில் ஈடுபட்டிருக்கிற மிஷனரிகளின் தேவ பாதுகாப்பிற்காக ...

ஜூலை 13 ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரி**களின் தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

ஜூலை 14 ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

ஜூலை 15 ⇨ உலகமெங்கும் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப் பள்ளிகள் மூலம் இரட்சிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பிராயத்தினருக்காக...

ஜூலை 16 ⇨ போதை பொருட்களுக்கு அடிமையாகி, கல்லூரிகள் மற்றும் பள்ளிகளுக்கு முறையாக செல்லாத இளம்பிராயத்தினர் மற்றும் குழந்தைகள் விடுதலையாக வேண்டி ...

ஜூலை 17 ⇨ நமது இந்த மாதத்தின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட வேண்டி...

ஜூலை 18 ⇨ உலகமெங்கும் மரணத்திற்கேதுவான வியாதிகள் மற்றும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் விடுதலையாக வேண்டி...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

நினைப்பதற்கும் அதிகமாய்ச் செய்ய அவரால் முடியும்.

கர்த்தர் ஏதாவது ஒன்றை உங்களிடம் செய்யச் சொன்னால், ஒருவேளை அது அர்த்தமற்றது போலத் தோன்றினாலும், அதை நீங்கள் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர் கர்த்தர். நாம் கேட்பதற்கும், நினைப்பதற்கும் அதிகமாய் அவரால் செய்ய முடியும். ஏன் கலக்கம்? **ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்.** யோபு 5:9.

கர்த்தர் நமக்கு தரவிருக்கும் பூமிக்குள்ளாய் கடந்து செல்ல நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். இப்பொழுதே அக்காலம் வந்து விட்டது! 'உங்களை அழைத்து செல்வேன்' என்று தேவன் கூறிய இடத்திற்குச் செல்லும் நேரம் வந்து விட்டது. உங்கள் சூழ்நிலையையோ, பொருளாதார நிலைமையையோ, குடும்பப் பின்னணியையோ, தகுதிகளையோ, அனுபவங்களையோ, உங்கள் ஆரோக்கியத்தையோ, வயதையோ அல்லது ஆண்/பெண் என்ற பாலினத்தையோ நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். இவற்றுக்கெல்லாம் அப்பால் தேவனால் கிரியை செய்ய முடியும். 'இப்பொழுதே ஆயத்தம்' என்ற நிலைக்கு நாம் வந்தால் போதும்!

'நான் எந்த நிலையில் இருக்கிறேன் என்றும், தேவன் என்னை எங்கு கொண்டு செல்ல விரும்புகிறார் என்றும், நான் அறிந்தும் 'A' யிலிருந்து 'B' க்கு செல்ல எது என்னைத் தடுக்கிறது? நான் எங்கு செல்ல வேண்டும் என்று நன்றாய் அறிவேனே,' என்று நீங்கள் திகைக்கலாமே. இதை விளக்க மத்தேயு 13ஆம் அதிகாரத்திற்கு உங்கள் கவனத்தை திருப்ப விரும்புகிறேன். எல்லாரும் நன்கு அறிந்த ஞாயிறு சிறுவர் வேதாகமப் பள்ளியில் கற்றுக் கொடுக்கும் கதை அது. விதைக்கிறவனைப் பற்றிய கதை.

விதைக்கிறவன் விதைக்கப் புறப்பட்டான். அவை நான்கு வித்தியாசமான மண்ணில் விழுந்தன என்று நாம் அறிவோம். நீங்கள் எந்த வித மண் என்று கேட்டால் நீங்கள் 'நல்ல நிலத்து மண்' என்று சொல்வீர்கள். நாம் எல்லாரும் அப்படியே இருக்க விரும்புகிறோம். அதுதான் நமது எதிர்பார்ப்புமாயிருக்கிறது. ஆனால், உண்மை வேறாகக் காணப்படுகிறது. நமது வாழ்க்கையும், நாம் கொடுக்கும் கனியும்தான் நாம் சரியான பதில் கொடுத்தோமா என்று நிரூபிக்கும். எதிர்பார்ப்புக்கும், யதார்த்தத்திற்கும் ஒரு இடைவெளி இருக்கிறது.

எனது 12 வது மகன் நல்ல ஒரு கால்பந்து விளையாட்டு வீரன். அதற்காக தேவனுக்கு நான் நன்றி சொல்கிறேன். இருப்பினும், அவனுக்கு 6 வயது இருக்கும்போது அவன் கால்பந்து விளையாட ஆரம்பித்தபோது, அவனது பயிற்சி வகுப்பு ஒன்றிற்கு நான் சென்றிருந்தேன். அப்பொழுது என் மகன் பந்தின் மிக அருகில் வந்து, அதை எட்டி உதைத்தான். அந்த பந்து எங்கே சென்றது என்று நிமிர்ந்து உயர நோக்கினான். மேலே எங்கேயும் அந்த பந்தைக் காணவில்லை. நானோ கீழே தரையை நோக்கிப் பார்த்தபோது, அது ஒரு சில சென்டிமீட்டர் தூரம்தான் கடந்து சென்றிருந்தது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு அழகான புன்னகையுடன் என் மகன் என்னிடம் வந்தான். அவனது விளையாட்டை அவன் தாய் காண்பதில் பெருமிதம் கொண்டு என்னிடம் கேட்டான், "அம்மா! நான் பந்தை உதைத்ததைப் பார்த்தீர்களா?"

நான் "மகனே, நீ பந்தை சரியாக உதைக்கவில்லை" என்று உண்மையை அப்படியே சொல்லவா அல்லது அவனை உற்சாகப்படுத்தி, நேர்மறையான கருத்துக்களை ஒரு தாயாக இருந்து அவனை ஆதரித்து சொல்லவா என்று சிந்தித்தேன். இறுதியாக, எல்லா தாய்மாரையும் போல, "மகனே, எவ்வளவு அருமையாய் நீ விளையாடினாய்... அருமை அருமை!" என்று கூறிவிட்டேன். அப்பொழுது அவனது முகத்தில் விலைகொடுக்க முடியாத புன்னகை மலர்ந்ததை நான் கண்டேன். அவன் எதிர்பார்த்தது ஒன்று .... ஆனால் உண்மையில் நடந்ததோ வேறு.

அவ்வாறாகவே, நாம் எல்லாரும் நல்ல நிலங்களாகவே இருக்க விரும்புகிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஆனால் உண்மை என்ன? நீங்களே இக்கேள்விக்கு பதிலளியுங்கள்.

**அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது** என்று மத்தேயு 13:4 இல் வாசிக்கிறோம். வழியருகே விதைகள் விழுந்தபோது அவைகளைப் பறவைகள் கொத்திச் சென்று விட்டன.

இயேசு இந்த உவமையைச் சீஷர்களுக்கு 19ஆம் வசனத்தில் விளக்கிச் சொல்கிறார்: **ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.**

இந்த வசனத்தில் இரண்டு காரியங்களில் கவனம் செலுத்த விரும்புகிறேன். தேவன் விரும்புகிற நிலைக்கு நாம் செல்ல முடியாதபடி தடுத்து நிறுத்துவது என்ன என்று நாம் அறிந்து கொள்ள தேவன்தாமே உதவி செய்வாராக.

முதலாவது சொன்ன நிலத்தை இயேசு விளக்கும்பொழுது, "பறவைகள் வந்து அதைப் பட்சித்துப் போட்டது" என்றார். கர்த்தருடைய வசனம் நம் இருதயங்களில் கிரியை செய்வதற்கு முன், சாத்தான் அதைப் பறித்துக் கொண்டு போய்விடுகிறான். இது நம் வாழ்க்கையில் எப்படி நடக்கிறது?

உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன். இது ஒரு கற்பனை கதைதான். தேவனது சித்தத்திலிருந்து மக்களை விலகிப் போகச் செய்ய தன்னிடத்திலுள்ள ஆயுத அறையிலிருந்து, ஆயுதங்கள் எதை வேண்டுமானாலும் வாங்கிச் செல்ல, தன்னுடன் இருந்த தள்ளப்பட்ட தூதர்களுக்கு சாத்தான் அழைப்பு கொடுத்தான். ஒவ்வொரு ஆயுதத்தின் கீழும், மேலும் அதன் விலை எழுதப்பட்டிருந்தது. அங்கு கொலை, பொறாமை, திருடு, வேலையைத் தள்ளிப்போடும் சோம்பல், பொய்கள் என்று பல ஆயுதங்கள் இருந்தன. ஆனால் அங்கு வெகு சிறியவைகளாய் இருந்த இரண்டு பொருட்களுக்கு மிக அதிக விலை போடப்பட்டிருந்தது. நம்முடைய வாழ்வில் சாத்தான் பயன்படுத்தும் மிக வல்லமையான ஆயுதங்கள் எவை என்று தெரியுமா? சோர்வு மற்றும் கவனச் சிதறலைக் கொடுப்பது ஆகியவைதான் சாத்தான் பயன்படுத்தும் வல்லமையான ஆயுதங்கள்.

நமது கவனத்தைத் திசை திருப்புவது சாத்தானின் மிக வல்லமையான ஆயுதங்களில் ஒன்று. நமது வாழ்க்கையில் தேவ சித்தம் நிறைவேறாமல் இருக்க நம்மைத் திசை திருப்பி, நம்மை அழிக்க சாத்தான் முயலுவான். தேவ சித்தத்தை நம் வாழ்வில் நாம் நிறைவேற்ற நம்மை ஆயத்தப்படுத்தவில்லையென்றால், சாத்தானின் சித்தத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இன்னும் விளக்கிச் சொல்ல வேண்டுமானால், தேவ சித்தத்திற்குள் நாம் காணப்படவில்லை என்றால், நாம் சாத்தானின் சித்தத்திற்குள் இருக்கிறோம் என்று புரிந்து கொள்ள வேண்டும். இதை ஏற்றுக்கொள்வது சிறிது கடினம்தான் என்று அறிவேன்.

நீங்கள் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் தேவசித்தத்தின்படிதான் ஊழியம் செய்கிறீர்களா என்று சிந்தியுங்கள். கர்த்தருக்காக, கர்த்தருடன் இசைந்து ஊழியம் செய்கிறீர்களா? நம்மை நாமே இக்கேள்விகளை கேட்டுக் கொள்ள வேண்டும். அநேக நேரங்களில், நாம் செய்வதெல்லாம், கர்த்தருடைய சித்தம் என்று நினைத்து விடுகிறோம். அது உண்மை அல்ல. தவறு. தேவனது சித்தத்தை அறியாமல், புதியதாக ஒன்றையும் செய்யத் துணிய வேண்டாம். ஒரு

வாக்குத்தத்தத்தை தேவனிடத்தில் கேட்டு, அதைப் பெற்றுக் கொண்ட பின் துவங்கலாம்.

கர்த்தருடைய சித்தத்திலிருந்து நம்மை விலக்கி வைப்பது 'கவனச் சிதறலாகும்'.

'கவனச்சிதறல்' என்பது நாமாக அதை எளிதில் அடையாளம் கண்டு கொள்ள இயலாத விதத்தில் இருக்கும். சாத்தான் புத்திசாலி, தந்திரமானவன். அந்த கவனச் சிதறலை அவன் கொண்டுவரும்போது, அதை உங்களால் தடுத்து நிறுத்தவே முடியாது.

ஆதியாகமம் 3:6–இல், ஏவாள் அந்த விருட்சத்தின் கனியைக் கண்டபோது, அது அவள் 'பார்வைக்கு இன்பமாய்' இருந்தது என்று வாசிக்கிறோம்.

அந்த மரம் அழகாகவும், அதின் கனி புசிப்பதற்கு மிகவும் சுவையானதாகவும், புத்தியைத் தெளிவிக்கிறதாகவும் அவளுக் குத் தோன்றிது.

அது அவளுக்கு நல்லதாக, இன்பம் தருவதாக, அழகாக, சுவையாக, இச்சிக்கப்படத்தக்கதாக, எல்லாவற்றிற்கும் மேலாக புத்தியைத் தெளிவுபடுத்துவதாக (ஞானத்தைத் தருவதாக) விளங்கினது.

இவைகளில் ஒன்றும் தவறான குணமுள்ளதாகத் தெரியவில்லை. இதில் ஒன்றும் சாத்தானிடத்திலிருந்து வந்ததாகத் தோன்றவில்லை. நம் ஒவ்வொவருக்கும் இத்தகைய குணாதிசயம் தேவை என்று தானே தோன்றுகிறது? இவற்றை 'கவனச் சிதறல்' என்று எப்படி கூற முடியும்?

அழகாக, மிகச் சுவையாக, இன்பம் தருவதாக, இச்சிக்கப்படத்தக்கதாக, புத்தியைத் தெளிவிக்கிறதாக இருக்கும் ஒன்று எப்படி 'கவனச்சிதறல்' என்று கூற முடியும்?

ஆனால் அது 'கவனச்சிதறல்' தான். அது மனித குலத்தின் வீழ்ச்சியையே கொண்டு வந்துவிட்டது. எப்போதுமே 'கவனச்சிதறலைக்' கொண்டு வருபவை, கவர்ச்சியான வடிவில், உருவத்தில், பல வண்ணங்களில், கண்களுக்கு மிக அழகான வைகளாகவே வரும். இயற்கையாகவே நல்லது போல் இருக்கும். இருப்பினும் அவை தேவனை விட்டு உங்கள் கவனத்தை விலக்குவதாக இருந்தால், நிங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

'என் வாழ்வில் இதுதான் என் பலமாக இருக்கிறது' என்று எதை நினைக்கிறீர்களோ அந்த இடத்தில்தான் சாத்தான் பலமாக அழுத்துவான். பேதுரு இயேசுவிடம், 'உம்மோடு மரிக்கவும் தயாராயிருக்கிறேன்' என்றான். பேதுரு இயேசுவின்மேல் அந்த அளவு அன்பு வைத்திருப்பதாக நினைத்தான். இயேசுவின் மேல் அவன் வைத்த அன்பு ஆழமானதா யிருந்ததால், எதுவும் அந்த அன்பை அசைக்க முடியாது என்று நம்பினான். ஆனால், இயேசுவோ, 'அதிகாலைக்கு முன் மூன்று முறை நீ என்னை மறுதலிப்பாய்' என்று உடனேயே பதிலளித்தார்.

அன்பு நண்பர்களே, நீங்கள் எந்த விஷயத்தில் மிகவும் பலமுள்ளவர்களாய் இருப்பதாக நினைக்கிறீர்கள்? உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளைக் குறித் தும் ஜெபியுங்கள் – உங்கள் பிள்ளைகள், குடும்பம், உங்கள் வேலை, உங்கள் ஊழியம், உங்கள் அழைப்பு, உங்கள் அபிஷேகம். இப்பகுதிகளிலெல்லாம் நமக்கு தேவ பெலன் வேண்டும். இல்லாவிட்டால், தேவன் நமக்கு அளித்துள்ள ஆசீர்வாதங்களை இழந்து போக நேரிடும்.

**தெளிந்த புத்தியுள்ளவர்களா யிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.** 1பேதுரு 5:8.

சமநிலையுடன், சுய ஒழுக்கத்துடன், விழிப்புடன், எல்லா நேரங்களிலும் எச்சரிக்கையுடன் இருங்கள்.

உங்களை உற்சாகப்படுத்தி, தட்டிக் கொடுத்து, 'விழித்திருங்கள்' என்று சொல்கிறேன். இது உங்களை விழிக்க வைக்கும் ஒலியாக இருக்கட்டும். **எச்சரிக்கை! கவனம்! விழிப்புணர்வு! சுய ஒழுக்கம்!** இவை உங்கள் வாழ்வில் மிக முக்கியமானவை. அடுத்த சில நாட்களுக்கு, வாரங்களுக்கு, தேவன்மேல் மட்டும் உங்கள் கவனத்தைத் திருப்புங்கள். தனிப்பட்ட விதத்தில் தேவன் உங்களோடு பேச வேண்டும் என்றும் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்றும் அவரிடம் கேளுங்கள். ஒரு சரியான தெளிவு கிடைக்கும் வரை உபவாசித்து ஜெபியுங்கள். ஏனென்றால் உங்கள் கவனத்தைச் சிதற டிக்க சாத்தான் காத்துக்கொண்டிருக்கி றான். ஏற்கனவே அவன் கவனச் சிதறலை உங்கள் வாழ்வில் கொண்டு வந்திருக்கலாம். என் அன்பு சகோதர சகோதரிகளே, இப்பொழுதே தேவன்மேல் கவனம் செலுத்துவோம்.

கடைசி நாட்களில் வாழும் நாம், நம் வாழ்வைக் குறித்த தேவன் வைத்திருக்கும் நோக்கத்திலிருந்தும், திட்டத்திலிருந்தும் விலகிப் போய்விடக் கூடாது என்பதே என் உண்மையான ஜெபமாயிருக்கிறது. தேவ சித்தத்தை நாம் நிறைவேற்றவில்லை யென்றால், நாம் சாத்தானின் சித்தத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடவேண்டாம்.

'தேவனை நேசிக்கிறேன்' என்று சொல்கிற நம் வாழ்வில் இந்த 'கவனச்சிதறல்' எவ்வளவு வல்லமையாய்க் கிரியை செய்கிறது என்பதை உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறேன்.

இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்று வேதம் சொல்கிறது. இஸ்ரவேலை யாராலும் சபிக்க முடியாது. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக எந்த இருளின் வல்லமையோ, மந்திரமோ அல்லது எந்த தீமையோ கிரியை செய்ய முடியாது. கர்த்தருடைய பிள்ளைகள் என்று சொல்லும்போது அதில் நீங்களும்

## அழைப்பின்எதிரொலி
### பத்திரிகையை

**இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு**

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| **Account Number** | : 1023 2923 805 |
| **Bank Name** | : STATE BANK OF INDIA |
| **Branch** | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| **IFSC Code** | : SBIN 0000249 |
| **SWIFT Code** | : SBI NIN BB 455 |



# குழிக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## விருப்பத்தை செயல்படுத்தும் தேவன்!

## THE LORD WHO GRANTS OUR DESIRES!

ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் - பிலிப்பியர் 2:13.



நான் சுமார் 18 வயது இளைஞனாயிருந்தபோது என் தகப்பனாரும், அவர்கள் சகோதரர்களும், அவர்களைச் சார்ந்தக் குடும்பத்தாரும் எங்கள் தேவாலயத்தில் ஆண்டவர் இயேசுவின் பாடல்களை முறையாகப் பாடி ஆராதிப்பதை நான் பார்த்து அவர்களுக்கு உதவி செய்து வந்தேன். தொடர்ந்து ஹார்மோனியம் போன்ற இசைக் கருவிகளை இசைக்கவும் கற்றுக் கொண்டேன்.

நான் ஆரம்பித்து நடத்திய '**நற்செய்தி ஜெபக்குழு**'வின் மூலம் ஓர் இசை மற்றும் பாடகர் குழுவை அமைத்து சபைகளிலும், கிராமங்களிலும், பட்டணங்களிலும் தேவ செய்தி, சாட்சி மற்றும் பாடல்கள் மூலம் சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் எனக்கு உதவி செய்தார். இக்குழுவில் சகோ. வெஸ்லி தேவதாசன் (வருகையின் தூதன்), மறைதிரு A. செல்வராஜ் (தற்போது தென்னிந்திய திருச்சபை மிஷனரி சங்கம், மேய்ப்பர்), வயலின் சகோ. டேவிட் ரெஜினால்ட் (ஆசிரியர்), மறைதிரு. ஜாண் ரோஷ் கமலம் (தற்போது தென்னிந்திய திருச்சபை போதகர், மதுரை), மறைதிரு. பாலஸ் (தென்னிந்திய திருச்சபை போதகர்), ஜெயச்சந்திரன் (Assembly of God), G. ஜெயானந்த பால்மணி (ஆசிரியர்) ஆகியோர் முக்கியமானவர்கள்.

நான் எனது, சற்று பாரமான பெரிய ஹார்மோனியத்தை என் தோள் மேல் சுமந்துகொண்டு கிராமங்களிலும், சந்தை வெளிகளிலும், சாலை ஓரங்களிலும், பாடல்களைப் பாடி, தேவ வார்த்தைகளைக் கூறி, என்னுடைய சாட்சியைப் பகிர்ந்து கொண்டேன். ஆயிரக்கணக்கான சுவிசேஷக் கைப்பிரதிகளை வினியோகித்து ஊழியம் செய்தேன். இந்த காரியங்களை என் முழு மனதுடன் சந்தோஷத்துடன் செய்தேன். பல மைல்கள் தூரம் கால்நடையாய் சென்று நான் விரும்பிய இடங்களில் எல்லாம் இசைக் கருவியுடன் பாடல் பாடி உலக இரட்சகர் இயேசு ஆண்டவரை சாதி, மத பேதமின்றி எல்லாருக்கும் தனி மனிதனாகச் சென்று பிரசங்கித்தேன்.

இன்று பார்க்கும்போது நான் முன் சிறுவயதில் எங்கெல்லாம் சென்று தெருமுனைகளிலும், சந்தை வெளிகளிலும் சென்று என் ஹார்மோனியம் இசைக்கருவியுடன் பாடி, தேவ வசனத்தை வார்த்தைகளாலும், கைப்பிரதிகளாலும் பிரசங்கித்தேனோ, அங்கெல்லாம் இன்று தேவாலயங்களும், தேவ மக்களும் பெருகியிருப்பதை நான் பார்க்கிறேன். அந்த நாட்களில் ஒரு தகுதியும், அந்தஸ்தும் இல்லாத என்னை மக்கள் பலர் ஏளனம் பண்ணினார்கள்.

காலம் கடந்தது; தேவன் என்னைப் படிப்படியாக உயர்த்தினார். தேவ ஞானம், மனுஷர் உதவி, பொருளாதாரம் ஆகியவற்றைத் தந்தார். அக்காலத்தில் விலையுயர்ந்த இசைக்கருவியான அக்கார்டியன் என்ற இசைக்கருவியை ஆண்டவர் எனக்குத் தந்தார். இதை வாங்க என்னிடம் பணம் இல்லாததால் வந்தவாசி என்ற ஊரைச் சார்ந்த திரு. M. பத்மனாபன் என்ற என் நண்பர் தனது மனைவியின் திருமண தாலியை அடகு வைத்துப் பணம் கொடுத்தார். என் உடன்பிறந்த இளைய சகோதரர் S. பிஜிலி சாம்ராஜ் அவர்கள் எனக்கு மிக உதவியாக இருந்து செயல்பட்டார்கள்.

இப்படியாக ஆண்டவர் என்னைப் படிப்படியாக தொலைக்காட்சி மூலமும், தற்போது யூடியூப் மூலமும் தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு மொழிகளில் தேவ செய்தியளிக்கவும் உயர்த்தியுள்ளார். இக்காலப் பிரபல இசைக் கருவிகளையும், சிறந்த பாடல்களையும் எனக்கு உதவியாகத் தந்து என்னை ஆதரிக்க ஓர் தலைமை தேவ சபையையும், ஏராளம் கிளை சபைகளையும், ஊழியர்களையும் தந்துள்ளார் ஆண்டவர் இயேசு கிறிஸ்து.

இதை வாசிக்கும் அன்பு வாசகரே! ஆண்டவருக்காக ஏதோ ஒன்றை செய்ய வேண்டுமென்ற ஓர் ஆசை உங்கள் மனதில் தோன்றுகிறதல்லவா! அதை இப்போதே செய்ய ஆரம்பியுங்கள். ஆள் பெலமோ, பண பெலமோ எதுவுமே இல்லாவிட்டாலும், மனம் இருந்தால் மார்க்கம் உண்டாகும். செய்ய விரும்பியதை கால தாமதமின்றி இன்றே செய்யுங்கள்! அதை இப்போதே செய்யுங்கள்!!

**ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.** பிலிப்பியர் 2:13.

---

நானும் அடங்கியுள்ளோம். ஆனால் நம் வாழ்வில் கலக்கத்தையும், மனக்குழப்பத்தையும் அழிவையும் ஏதோ ஒன்று மட்டும் கொண்டு வரும். அதை அனுமதிக்க ஒரே ஒரு நபர் மட்டும் உண்டு. அந்த நபர் 'நாம்தான்.'

இதை வேத வசனத்திலிருந்து பார்க்கலாம். இஸ்ரவேலரை மோவாபின் ராஜா சபிக்க விரும்பியபோது, பிலேயாமை அழைத்து அவர்களைச் சபிக்கக் கூறினான். பிலேயாமும் அவர்களைச் சபிக்க முயன்றான். ஆனால், ஒவ்வொரு முறையும் அவன்

அவர்களை ஆசீர்வதிக்கவே செய்தான். மோவாவின் ராஜாவாகிய பாலாக், இதனால் பெரிதும் ஏமாற்றமடைந்து, கோபம் அடைந்து வருந்தினான்.

இறுதியாக, பிலேயாம் ஒரு ஆலோசனையை ராஜாவுக்கு அளித்தான்: "இஸ்ரவேலர் கர்த்தருடைய மக்கள். எனவே கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கவே விரும்பு கிறார். எனவே நீங்கள் எந்த விதத்திலும் அவர்களைச் சபிக்கவோ, அழிக்கவோ முடியாது.' ஆனால், அவர்களை வீழ்த்த ஒரே ஒரு வழி உண்டு. அது என்னவென்றால், அவர்கள் கவனத்தைச் சிதறடிக்க வேண்டும். ... அப்பொழுது கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் வரும். பின்பு அவரே அவர்களை அழித்து விடுவார்." என்றான்.

**பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள்தானே; அதினால் கர்த்தரின் சபையிலே வாதையும் நேரிட்டதே.** எண்ணாகமம் 31:16.

பிலேயாமின் ஆலோசனை என்னவென்றால், மோவாபிய பெண்களை இஸ்ரவேலரிடத்தில் போக வைக்க வேண் டும். அவர்கள் இஸ்ரவேலில் ஆண்களைப் பாலியல் விருப்பத்திற்கு ஆளாக்குவார்கள். அவ்வாறு அவர்கள் பாலியலில் ஈடுபட, மோவாபியப் பெண்களுடன் சேர்ந்து அவர்களது தெய்வங்களை வணங்க வேண்டும். அந்த தெய்வத்தின் பெயர் பாகால் பேயோர் என்பதாகும். அதைத் 'திறப்பின் தெய்வம்' என்றும் அழைப்பார்கள். இஸ்ரவேல் ஆண்கள் மோவாபிய தெய்வங்களை வணங்கச் சம்மதித்தால், மோவாபியப் பெண்கள் தங்களை அவர்களுக்குக் கொடுக்க சம்மதித்தார்கள்.

இஸ்ரவேல் ஆண்களின் பலவீனம் என்னவென்று பிலேயாம் அறிந்தது மட்டுமின்றி, தம்மைத் தவிர வேறு எந்த தேவர்களையும் இஸ்ரவேலர் வணங்குவது கர்த்தருக்கு பிடிக்காது என்பதையும் அறிந்திருந்தான். கர்த்தர் பட்சிக்கிற அக்கினியான, வைராக்கியமுள்ளவராக இருக்கிறார். தமது ஜனம் வேறு எந்த தெய்வத்தையும் வணங்குவது அவருக்கு சகிக்க முடியாத ஒன்று. தம்முடைய இடத்தில் இஸ்ரவேலர் வேறு எதை வைக்கவும் அவர் சகிக்க மாட்டார்.

பிலேயாம் இதை அறிந்து, இஸ்ரவேலரது கவனத்தைச் சிதறடிக்க அந்த ஆலோசனையைத் தந்தான். அவ்வாறு அவர்கள் செய்யும்போது, தேவ சித்தத்திலி ருந்து இஸ்ரவேலர் விலகுவதுமன்றி, தங்கள் வாழ்க்கையில் தேவ கோபாக்கினைக்கும் இடம் கொடுத்து விட்டனர்.

அன்பு நண்பர்களே, நீங்கள் எந்த சூழ்நிலைக்குள்ளாய்க் கடந்து போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. உங்கள் வாழ்க்கைப் பயணத்திலே நீங்கள் எங்கு இருக்கிறீர்களோ அறியேன். ஆனால், உங்கள் வாழ்க்கையில் இப்படிப்பட்ட 'கவனச்சிதறல்' வராமல் கவனமாய் இருங்கள். அது உங்கள் கண்களுக்குப் பிரியமானதாய், அழகாய்த் தோன்றி, உங்கள் இருதயத்திற்கு மகிழ்ச்சியையும் தரலாம். ஆனால், தேவன் உங்கள் வாழ்க்கையில் வைத்திருக்கும் நோக்கத்திலிருந்து உங்களை மாற்ற வைக்குமானால், அதிலிருந்து கடந்து சென்று விடுங்கள். கர்த்தர் அதற்கான பெலனை உங்களுக்கு அருள அவரை வேண்டிக் கொள்ளுங்கள்.

குறிப்பாக வாலிபர்களே, உங்கள் திருமண விஷயத்திலே கவனமாயிருங்கள். திருமணம் ஆத்தும ஆதாயம் செய்வது அல்ல. தவறான விசுவாச இணைப்புக்குட் படாதீர்கள். உங்கள் விசுவாசமும், தரிசனமும், உங்கள் வாழ்க்கைத் துணைக்கு ஒத்து போவதாக இருக்க வேண்டும். இல்லையென்றால், வாழ்க்கை முழுவதும் போராட வேண்டியதாயிருக்கும்.

இதை வாசிக்கும் ஒவ்வொருவரும், அவரவருடைய கவனம் எங்கே சிதறுகிறது என்று கண்டுபிடித்து, அதை விட்டு விலகி, நம் வாழ்வின் புதிய பருவ காலத்தை ஏற்று நடக்க ஆயத்தமாக வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். கர்த்தர்தாமே உங்களுக்கு உதவுவாராக.

தடைகளை நீக்கி, முன்னேறிச் செல்லத் தொடங்குங்கள்.

நீங்கள் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும் மிக அதிகமாகக் கர்த்தர் உங்களுக்கு ஆசீர்வாதம் அருள்வார். உங்கள் புதிய பருவகாலத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!


## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

**ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே.**

**மேலும் விவரங்களுக்கு :**

தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி

10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.

தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766

கைபேசி: (+91) 98410 71852, 95661 31858

மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in


அன்பு வாசகர்களே!

கீழே காண்பவைகளில் உங்கள் பதிலை ✓ செய்து எங்களுக்கு அனுப்பினால் **அழைப்பின் எதிரொலி** மூலம் பரிசை பெறலாம்!

1. இன்று **அழைப்பின் எதிரொலி** ஊழியத்திற்காக ஜெபித்தீர்களா? ஆம் ☐ இல்லை ☐
2. **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை நீங்கள் தொடர்ந்து பெற விரும்புகிறீர்களா? ஆம் ☐ இல்லை ☐
3. **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்காக சில வாசகர்களை சேர்க்க விரும்புகி றீர்களா? (கட்டணம் செலுத்தத் தேவை இல்லை) ஆம் ☐ இல்லை ☐
4. **அழைப்பின் எதிரொலி**யின் எந்த பகுதி உங்களுக்கு பிடித்தமானது? தேவசெய்தி (கட்டுரை) ☐ ஆசிரியர் பகுதி ☐ ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு ☐
5. நமது **அழைப்பின் எதிரொலி**யின் எண்ணை வாட்ஸ்அப்பில் பதிவு செய்துள்ளீர்களா? ஆம் ☐ இல்லை ☐
6. நமது **அழைப்பின் எதிரொலி யூடியூப் (YouTube) சேனலைப்** பார்த்து Subscribe செய்துள்ளீர்களா? ஆம் ☐ இல்லை ☐
7. நமது **அழைப்பின் எதிரொலி யூடியூப் (YouTube) சேனலில்** வரும் குறுஞ்செய்தியை பார்க்கிறீர்களா? ஆம் ☐ இல்லை ☐
8. நமது **அழைப்பின் எதிரொலி யூடியூப் (YouTube) சேனலில்** தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, இந்தி மொழிகளில் வரும் குறுஞ்செய்தியை பார்க்கிறீர்களா? ஆம் ☐ இல்லை ☐

இந்த பகுதியை மட்டும் கத்தரித்து (வெட்டி) பதிலை நிரப்பி நமது **அழைப்பின் எதிரொலிக்கு** அனுப்பினால், நாங்கள் உங்களுக்கு பரிசை அனுப்பி வைப்போம்.

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❋ வருட சந்தா ரூ. 100/–     ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 29th MAY 2023
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**